# இயல் - ஐந்து

# குடும்பவியல்

# 5. குடும்பவியல்

உறவு முறையில் மனிதர்களை இணைக்கும் பந்தத்திற்குக் குடும்பம் என்று பெயர். குடும்பம் என்பதற்குப், "பல்வேறு மனிதர்களைக் கொண்ட சமுதாயத்தில் குறிப்பிட்ட நபர்களை, தாய், தந்தை, கணவன், மனைவி, சகோதர சகோதரிகள், பிள்ளைகள் எனும் உறுப்பினர்களைக் கொண்டு இயங்கும் அமைப்பிற்குக் குடும்பம் என்று பெயர்[1] என உ.அலிபாவா விளக்கம் தருகிறார். மனித இனம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தது என்பது குர்ஆனின் கூற்றாகும். மனித இனத்தின் முதல்படி குடும்பமாகும். இறுதிப்படி முழு மனித சமூகமாகும். உலகில் அமைதி காண முதலில் ஒவ்வொரு குடும்பத்திலும் நிம்மதி நிலவ வேண்டும். தந்தை, தாய், கணவன், மனைவி, குழந்தைகள் இவர்கள் அனைவரும் குடும்பத்தின் உறுப்பினர்கள் ஆவர். ஒரு குடும்பத்தின் தலைவன் தந்தை: தலைவி தாய் பெற்ற பிள்ளைகள் இவர்கள் இருவருக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டியது கடமையாகும். திருமறையில் இறைவன் குடும்பம் உருவான முறையினை,

> மனிதர்களே, உங்களை ஓர் ஆன்மாவிலிருந்து படைத்த உங்களின் இறைவனுக்கு நீங்கள் அஞ்சுங்கள், மேலும் அதே ஆன்மாவிலிருந்து அதனுடைய துணையை அவன் உண்டாக்கினான். மேலும் அவை இரண்டின் மூலம் (உலகின்) அதிகமான ஆண்களையும் பெண்களையும் பரவச் செய்தான் (4:1)

என வரும் வசனம் உணர்த்துகிறது. உலக மக்கள் அனைவரும் ஆண், பெண் என்ற ஒரு குடும்ப வாழ்வின் தோற்றத்தின் வளர்ச்சி தான் என்றும் இது பல கிளைகளாக உருவாகி அவை சமூகம் என்று அழைக்கப்பட்டு பல்வேறு பிரிவுகளைக் கொண்டு பல்வேறு நாடுகளில் குடியேறி வாழ்கின்றனர். குடும்பம் என்ற ஒரு அமைப்பில் வாழும் மனிதன் பிறருடன் எப்படி நடந்து கொள்ளுதல் வேண்டும் என்பதை பெற்றோர், மனைவி, பிள்ளைகள், இரத்த பந்தம் மற்றும் உறவினர், அண்டை வீட்டார், சகோதர சகோதரிகள் மற்றும் நண்பர்கள், சமூகம், எனும் தலைப்புகளில் இவ்வியல் ஆய்கிறது.

**பெற்றோர்**

“உண்மை முஸ்லிமின் தலையாயப் பண்புகளில் பெற்றோருடன் உபகாரமாகவும் நன்றியுனுடம் நடந்து கொள்வது ஒன்றாகும். இஸ்லாம் வலியுறுத்தும் மிக முக்கியக் கடமைகளில் பெற்றோருக்கு உபகாரம் செய்வது குறிப்பிடத்தக்கதாகும். இது குறித்த உறுதியான ஆதாரங்கள் உள்ளன. மார்க்கப் பயனுள்ள முஸ்லிம் அல்லாஹ்வின் வேதம் மற்றும் நபி (ஸல்) அவர்களின் வழிமுறைகளிலிருந்து பெறப்பட்ட ஆதாரங்களை வழிகாட்டியாகக் கொள்ள வேண்டும். அவையனைத்தும் பெற்றோருடன் உபகாரமாகவும் அழகிய உறவுடனும் நடந்து கொள்ள வலியுறுத்துகின்றன[2] என்கிறார் அஷ்ஷைக் முகம்மது அலீ அல் ஹாஷிமி. பிள்ளைகள் பெற்றோரைப் பேண வேண்டுமெனத் திருமறையும் நபிமொழியும் பல நிலைகளில் எடுத்துரைக்கின்றன.

> தாய் தந்தையரிடம் மிக கண்ணியமான முறையில் நடந்து கொள்ளுங்கள். பெற்றோரில் ஒருவரோ இருவருமோ முதுமையை அடைந்து விட்டநிலையில் உம்மிடம் இருந்தால் அவர்களை “சீ” என்று கூடக் கூறாதீர் மேலும் அவர்களைக் கடிந்து பேசாதீர்! மாறாக அவர்களிடம் கண்ணியமாகப் பேசுவீராக! மேலும், பணிவுடனும், கருணையுடனும் அவர்களிடம் நடந்து கொள்வீராக! மேலும் நீர் இறைஞ்சிய வண்ணம் இருப்பீராக! என் இறைவனே சிறுவயதில் எவ்வாறு என்னை இவர்கள் கருணையுடனும், பாசத்துடனும் வளர்த்தார்களோ அவ்வாறு இவர்கள் மீது கருணை புரிவாயாக! (17:23,24)

> பெற்றோர் நலன் பேண வேண்டுமென்று நாம் மனிதனுக்கு அறிவுறுத்தியுள்ளோம், அவனுடைய தாய் நலிவுக்கு மேல் நலிவை ஏற்று அவனைத் தன் வயிற்றில் சுமந்தாள். மேலும், அவன் பால்குடி மறக்க இரண்டு ஆண்டுகள் பிடித்தன. (எனவே) எனக்கு நன்றி செலுத்து. மேலும், உன் பெற்றோருக்கும் நன்றி செலுத்து (31:14)

எனத் திருமறையும்,

சுவனம் தாயின் காலடியிலிருக்கிறது (தாய்க்குப் பணிவிடை செய்பவர் சுவனம் புகுவர்)[3] (நூல் : அஹ்மத்)

பெற்றோருக்கு நன்மை செய்தவரின் பிரார்த்தனை இறைவனிடத்தில் ஏற்கப்படும்[4]

இறைத்தூதரே! எனது பெற்றோர் இறந்த பின்னரும் அவர்களுக்கு நான் ஆற்றவேண்டிய கடமை ஏதும் எஞ்சியுள்ளதா என ஒரு நபித்தோழர் கேட்டார். நபிகள் நாயகம் (ஸல்) பதிலளித்தார்கள்!

ஆம்!

அவர்களுக்காக இறைவனிடம் பாவ மன்னிப்புக் கோருங்கள். அவர்களின் மரண சாசனத்தை நிறைவேற்றுங்கள். பெற்றோர்களின் உறவுகளைத் துண்டிக்காமல் வாழுங்கள். பெற்றோர்களின் நண்பர்களுக்குக் கண்ணியம் அளியுங்கள், அவர்களை உபசரியுங்கள்[5] (நூல் : அபூதாவூத்)

என நபி மொழிகளும் கூறுகின்றன.

"தாய் தந்தையுடன் அழகிய முறையில் நடந்து கொள்ளுங்கள். இவ்வாறு நடந்து கொள்வது ஈருலகிலும் சிறந்த பாக்கியம் எனக்கருதுங்கள். இறைவனுக்கு அடுத்து மனிதன் மீது அதிக உரிமை அவனுடைய தாய் - தந்தையர்குரிய உரிமைகளே ஆகும். தாய் - தந்தையர்க்குரிய உரிமைகளின் முக்கியத்துவத்தையும் மகத்துவத்தையும் திருமறை அழுத்தமாக எடுத்துரைத்திருக்கிறது"[6] என்கிறார் முகம்மத் யூசுப் இஸ்லாஹி.

பெற்றோருக்குப் பணிவிடை செய்வது என்பது கருணையுடன் அவர்களைப் பார்ப்பது, திறந்த மனதுடன் செலவிடுவது, ஆதரவான அழகிய வார்த்தைகளால் உரையாடுவது, மற்றும் நேசம் மிகுந்த புன்னகை இவைதான் இஸ்லாமியரின் இயற்கைப் பண்புகளாகும். இவற்றைப் பெற்றோரிடம் வெளிப்படுத்துவது முஸ்லிமின் கடமையாகும்.

**மனைவி - சில விளக்கம்**

திருமண உறவின் வழி வரும் மனைவி குறித்து, "இஸ்லாமியப் பார்வையில் திருமணமென்பது மனதில் அமைதியையும் இதயத்தில் உறுதியையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தக் கூடியதாகும். அது ஆண், பெண்ணிடையே அன்பையும் நேசத்தையும் கருணையையும் நிலைத்தோங்கச் செய்கிறது. இதன் மூலம் கணவன் மனைவிக்கிடையில் அன்பான, அமைதியான குடும்ப வாழ்வு ஏற்பட்டு ஒரு தூய்மையான இஸ்லாமிய சந்ததி உருவாக வழி பிறக்கிறது"[7] என்கிறார் ஷைக் முஹம்மது அலீ அல் ஹாஷிமி.

ஒவ்வொரு குடும்பத்திலும் கணவனும், மனைவியும் கருத்தொருமித்த உறவுடன் இருந்தால் அந்த இல்லத்தில் நிம்மதியும் இன்பமும் நிலவும். இல்லையெனில் அந்த இல்லம் உலகிலேயே நரகின் படுகுழியாகிவிடும். வாழ்நாள் முழுவதும் அனைத்துச் சுகதுக்கங்களிலும் இவர்கள் சமபங்கெடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். இவர்களின் பயிற்சியினால் தான் குழந்தைகளின் பண்பும், பழக்கமும், வாழ்வும் உருவாகின்றது. "கணவன் மனைவியிடம் எப்படி நடக்க வேண்டும், மனைவி கணவனிடன் எப்படி நடக்க வேண்டும் என்பதையும், கணவன், மனைவி இருவரின் உறவு நிலைகளைப் பற்றியும் இஸ்லாம் வகுத்துக் காட்டுகிறது"[8] என உ. அலிபாவா கூறுகிறார்.

ஆண், பெண்ணிடையே அமைந்த இந்த இயற்கையான தொடர்பை மிக அழகிய முறையில் திருமறை குர்ஆன் வர்ணித்துக் காட்டுகிறது. இருவருக்குமிடையே புரிந்துணர்வையும் தொடரும் அன்பையும் மன அமைதியையும் திருமண உறவு ஏற்படுத்துகிறது என்று அருள்மறை மொழிகிறது.

> நீங்கள் சேர்ந்து வாழக் கூடிய (உங்கள்) மனைவிகளை, நீங்கள் அவர்களிடம் மனநிம்மதி பெறுவதற்காக உங்களிலிருந்தே அவன் படைத்து உங்களுக்கிடையில் அன்பையும் நேசத்தையும் உண்டு பண்ணியிருப்பதும், அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும். சிந்தித்து உணரக்கூடிய ஜனங்களுக்கு, இதிலும் (ஒன்றல்ல) நிச்சயமாக (பல) அத்தாட்சிகள் இருக்கின்றன
>
> (30:21)

> அவர்கள் (பெண்கள்) உங்களுக்கு ஆடையாகவும், நீங்கள் (ஆண்கள்) அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கின்றீர்கள் (2:187)

என்று திருமறையும்,

> இறைவனை நினைவு கூரும் நாவு இறைவனுக்கு நன்றி செலுத்தும் உள்ளம், இறைவழியில் நடந்திடக் கணவனுக்கு உதவிடும் இறை நம்பிக்கையுள்ள மனைவி இவையே அனைத்தையும் விடச் சிறந்த செல்வமாகும்[9] (நூல்:திர்மதீ)

என நபி மொழியும் நவில்கின்றன. கணவனிடம் மனைவி நாணத்துடனும், புன்னகையான முகத்துடனும், குறிப்பரிந்து செயல்படும் திறத்துடனும், தோழமையுடனும், நட்புடனும், அறிவு நினைவுடனும் நடந்து கொள்ளுதல் வேண்டும். மனைவியிடம் கணவன் மனைவியின் விருப்பம் போலும், கருணையுடனும், வாழ்வில் இணைந்தே நடந்து கொள்ளவேண்டும். சுருங்கக் கூறின், செம்புலப்பெயல்நீர் போலவும் அன்றில் பறவை போலும் கணவன் மனைவி உறவு நிலை நீடிக்க வேண்டும்.

**பிள்ளைகள்**

பெற்றோர்கள் தம் குழந்தைகளை இனிய வார்த்தைகள் கூறி அன்புடன் நடத்த வேண்டும். பிள்ளையின் தலையைப் பாசமாகத் தடவிக் கொடுப்பதும், முத்தமிடுவதும் சிறியவர்களுக்குப் பெரியவர்கள் மீது கண்ணியத்தையும், மரியாதையையும் உண்டாக்கக் காரணமாகும். முதியோர்கள் கால நிலையை அனுசரித்து, தக்க முறையில் இளம் உள்ளங்களைக் கவர்ந்து அவர்களின் மேலெண்ணங்களையும், விருப்பங்களையும் உணர்ந்து மதித்து நடந்து கொண்டால் பெரியோர் - சிறியோர் உறவு பலப்படும். சிறியவர்கள், பெரியவர்களின் வயதிற்கும், அனுபவத்திற்கும் கண்ணியமளித்து நடந்து கொள்ள வேண்டும். பெரியவர்களுக்கு முந்தி சலாம் கூறுவது, அவர்களின் தேவையறிந்து சேவை செய்வது, அவர்களுடைய ஏவல்களை மனம் கோணாமல் நிறைவேற்றுவது: அவர்கள் அறிவுரைப்படி நடப்பது நற்பண்பாகும். “வயதில் முதிர்ந்தோர் என்பதற்காக ஒரு பெரியோரை கண்ணியப்படுத்துவபனுக்கு அவன் முதுமை பருவத்தை அடையும் போது அவனை கண்ணியப்படுத்துவதற்கு

அல்லாஹ் ஒருவனை நியமிக்கிறான்" என்றும் "வயது முதிர்ந்த ஒருவரை கண்ணியப்படுத்துவது அல்லாஹ்வைக் கண்ணியப்படுத்துவது போன்றதாகும்" எனவும் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார். "வயதில் மூத்தோரைக் கண்டால் வயதில் சிறியோர் முந்தி சலாம் சொல்லுவார்களாக" என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் ஏவியுள்ளார்கள். நபி மொழியானது குழந்தையின் வளர்ப்பினை,

> உங்களிடம் கண்ணியத்துடன் நடந்து கொள்வது உங்கள் குழந்தைகளின் கடமை: உங்கள் குழந்தைகளைச் சமமாக நடத்துவது உங்களின் கடமை[10] (நூல்:அபூதாவூத்)

> தந்தை தன் பிள்ளைக்கு அளிக்கும் மாபெரும் பரிசு நல்லொழுக்கமே![11] (நூல்:திர்மிதி)

எனக் கூறுகிறது. முஹம்மத் யூசுப் இஸ்லாஹி, "குழந்தைகள் இறைவனால் வழங்கப்பட்ட கொடை குழந்தைப் பிறப்பின் போது மகிழ்ச்சியைக் கொண்டாடுங்கள். ஒருவன் மற்றவர்க்கு இதைக் குறித்து வாழ்த்து தெரிவித்துக் கொள்ளுங்கள். நன்மை, பாக்கியங்கள் அருளப்படுவதற்காகவும், து.ஆ - பிரார்த்தனையுடன் அதனை வரவேற்புச் செய்யுங்கள்! தான் படைத்துள்ள ஒரு மனிதனை வளர்க்கும் பேற்றை இறைவன் உங்களுக்கு வழங்கியுள்ளதற்கும் மேலும், உங்களுக்குப் பின்னரும் இறைநெறிகளைப் பின்பற்றுவதற்கும் அதனைப் பரப்புவதற்கும் உலகில் ஒரு வாரிசை இறைவன் உங்களுக்கு வழங்கியுள்ளது குறித்தும் இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள்!"[12] என்கிறார்.

குழந்தைகள் மனிதனின் கண்ணிற்கும் மனதிற்கும் குளிர்ச்சியளிப்பவர்கள், அவர்களால் தான் மனித வாழ்வு இனிமை பெறுகிறது. அல்லாஹ்வுக்குப் பின் அவர்கள் மீதே நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் ஏற்படுகிறது. அவர்கள் மீது இறங்கும் அல்லாஹ்வின் அருள் பெற்றோருக்கும் கிடைக்கிறது, பிள்ளைகளால் அல்லாஹ் உணவில் பரக்கத் செய்கிறான். அல்லாஹ் குழந்தைகளைப் பற்றி தனது திருமறையில்,

> பொருளும் மக்களும் இவ்வுலக வாழ்க்கைக்குரிய அலங்காரங்களே (18:46)

என்று வர்ணிக்கிறான். குழந்தைகளை வளர்க்க செலவு செய்வதில் கஞ்சத்தனம் செய்யாதீர்கள், பொருளாதார வசதி குறைவு, உடல் நலக்குறை அல்லது ஏதேனும் வேறு காரணம் இருப்பினும் குழந்தை பிறப்பது சிரமம் தரக்கூடியது அல்லது தொல்லை தரக்கூடியது என்று கருத வேண்டாம். குழந்தை பிறப்பதற்கு முன்னர் அல்லது பிறந்த பிறகு அதனைக் கொலை செய்வது பெரும் மோசமான கல் நெஞ்சத்தனமாகும். மிகப் பயங்கரமான ஒரு கொடுஞ்செயலும் ஆகும். மேலும், அது ஒரு கோலைத்தனமும் ஆகும். இன்னும் அது ஈருலக அழிவுக்கும் வழிவகுக்கும். இதனை இறைவன் திருமறையிலே,

> எவர்கள் தம் குழந்தைகளை அறியாமையினாலும் மூடத்தனத்தினாலும் கொன்று விட்டார்களோ மேலும், அல்லாஹ்வின் மீது பழி சுமத்தி, அவர்களுக்கு வழங்கியிருந்தவற்றைத் தாங்களாகவே தடை செய்து கொண்டார்களோ அவர்கள் நிச்சயமாகப் பேரிழப்புக்கு ஆளாகி விட்டார்கள். திண்ணமாக, அவர்கள் வழிதவறிப் போய்விட்டார்கள் அவர்கள் ஒரு போதும் நேர் வழி பெற்றவர்களால் இருக்கவில்லை (6:140)

என அறிவுறுத்துகிறான். மேலும், தம் குழந்தைகளைக் கண்டிப்பாகக் கொல்லக்கூடாது என்று இறைவன் கட்டளையிடுகின்றான்.

**பிள்ளைகளிடையே சமத்துவம்**

சமத்துவமாக வளர்க்கப்படும் பிள்ளைகளிடத்தில் பிறரை நேசித்தல், தன்னை விடப் பிறரைத் தேர்ந்தெடுத்தல், பிறருக்கு உபகாரம் செய்தல் போன்ற நற்குணங்கள் குடிகொள்ளும், அதனால்தான் பிள்ளைகளிடையே சமத்துவத்தைப் பேணுமாறு இஸ்லாம் வலியுறுத்துகிறது.

**சிறந்த பண்புகளையுடைய பிள்ளைகள்**

இறைவனிடம் நற்பண்புகளும், ஒழுக்கம் பெற்றோரிடமும் வருகிறது என்பதனை நபிமொழியானது,

> நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், நற்பாக்கியம் அல்லாஹ்விடமிருந்து கிடைக்கிறது, ஒழுக்கம் பெற்றோரிடமிருந்து கிடைக்கிறது
>
> (அல் அதபுல் முஃப்ரத்)

என மொழிகிறது.

ஒரு உண்மையான இஸ்லாமியன் தன் பிள்ளைகளின் உள்ளத்தில் நுட்பமான நற்பண்புகளையும் நல்லறிவையும் எப்படி விதைப்பது என்று அறிந்திருப்பான்.

- பெற்றோர்கள் தன்னைப் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக ஆக்க வேண்டும்.
- பிள்ளைகளுடன் கலந்தாய்வு செய்தல் வேண்டும், நன்றாகப் பழகுதல் வேண்டும்.
- முகமலர்ச்சியுடன் அவர்களை அரவணைத்து அன்பு காட்டவேண்டும்.
- அவர்களை உற்சாகப் படுத்த வேண்டும்.
- அனைத்துப் பிள்ளைகளுடனும் அன்பையும் சமத்துவத்தையும் பேண கற்றுக் கொடுக்க வேண்டும்.
- அவர்களைக் கண்டித்துச் செம்மைப்படுத்த வேண்டும். வாழ்வில் நேர்வழி காட்டி வளர்த்தல் வேண்டும்.

இது போன்ற பண்புகள் நல்ல பிள்ளைகளை உருவாக்க வழிவகுக்கும். இஸ்லாமிய அடிப்படையையும் நபிமொழியும். இவற்றுக்கு மேலாகத் திருமறையின் வழியும் பிள்ளைகளை வளர்த்து வந்தால் அவர்கள் எதிர்காலத்தில் சிறந்தவர்களாகத் திகழ்வர்.

**இரத்த பந்தம் மற்றும் உறவினர்**

பல குடும்பங்கள் இணைந்தது ஒரு சமூகம். ஒரு குடும்பத்திற்கும் மற்றொரு குடும்பத்திற்கும் இணைப்புப் பாலமாக உறவினர்கள் அமைகின்றனர். ஒரு குடும்பத்தில் மட்டும் அமைதியை நிலை நாட்டி விட்டு, உறவு முறையில் தொடர்பு கொண்ட வேறொரு குடும்பத்தில் அமைதி இல்லையெனில், இரண்டு குடும்பங்களிலும் அமைதியழிந்து விடும். ஒரு குடும்பத்தில் செல்வச் செழிப்பும், உறவின் முறையால் நெருங்கிய மற்றொரு குடும்பத்தில் வறுமையின் வருத்தமும், இருந்தால் எங்ஙனம் இரு குடும்பத்திலுமுள்ள உறவினர்களிடையே உறவு ஏற்படும். செல்வ நிலையிலுள்ளவர்கள் தமது உறவினர்களில் வறுமையில் வாடுவோரின் துயர் துடைக்க முயற்சி செய்ய வேண்டும். அயலார்க்கு அளிப்பதைக் காட்டிலும் தமது உறவினர்களுக்கு அளிக்கும் வெகுமதியும், தர்மமும் இரு மடங்கு பலன் தரும். ஒன்று தர்மம் செய்வதற்காக; இரண்டு உறவினர்களை ஆதரித்ததற்காக. செல்வத்தில் புரளும் சீமான்கள் உதவி

செய்யாவிடில் தமது உறவினர்களில் வரியவர்கள் பிச்சையெடுக்கவோ பிறர் தயவை நாடி வாழவோ நேரும் போது வரும் இழிவு, அவமானம் அந்த உறவுக்காரச் சீமானுக்கும் தானே, இதனைத் திருமறையில் இறைவன்,

> நீங்கள் நீதி செலுத்தும்படியாகவும் நன்மை செய்யும் படியாகவும், பந்துக்களுக்கும் உதவி செய்யும் படியாகவும் நிச்சயமாக அல்லாஹ் உங்களை ஏவுகிறான் (16:90)

> உறவினர்களுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும், அவரவர்களுடைய பங்குகளைக் கொடுத்துவிடுவீராக? (17:26)

> ஆகவே அந்த அல்லாஹ்வுக்கு நீங்கள் பயந்து (நடந்து கொள்ளுங்கள் அவனைக் கொண்டே (நீங்கள் உங்களுக்குள்) ஒருவருக்கொருவர் (வேண்டியவற்றைக்) கேட்டுக் கொள்கிறீர்கள். இன்னும் (அல்லாஹ்வுக்குப் பயந்து) இரத்தக் கலப்பு பந்தத்திற்கும் (மதிப்பளியுங்கள்) (4:1)

இரத்த பந்துக்களை நேசிப்பது மிக முக்கியமான இஸ்லாமிய அடிப்படையில் ஒன்றாகும். நபி(ஸல்) அவர்கள் ஏகத்துவ பிரச்சாரத்தை ஆரம்பித்து, இப்புனித மார்க்கத்தை உலகில் பரவச் செய்த காலத்திலிருந்தே இதுபெரும் முக்கியத்துவம் பெற்று வருகிறது. அது மார்க்கத்தின் பண்புகளை வெளிப்படுத்துவதாகவும், சிறந்த போதனையாகவும் அமைந்துள்ளது.

> நீர் அல்லாஹ்வை வணங்கி அவனுக்கு எந்த ஒன்றையும் இணை வைக்காதிருப்பது, தொழுகையை நிலை நாட்டுவது, ஜகாத்தை கொடுத்து வருவது மற்றும் இரத்த பந்துக்களோடு இணைந்திருப்பது (ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ்முஸ்லிம்)

என வரும் நபிமொழி தன் உறவினர்களுடன் இணைந்திருப்பது இஸ்லாமியர்களின் கடனாகச் சுட்டுகிறது. மேலும்,

இரத்த பந்துக்களுடன் இணைந்து வாழ்வதை அல்லாஹ்வை வணங்குவது, அவனை ஏகத்துவப்படுத்துவது, தொழுகையை நிலைநாட்டுவது, ஜக்காத்

கொடுப்பது என்ற கட்டாயக் கடமைகளுடன் இணைத்து ஒரே வரிசையில் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே இரத்த பந்துக்களுடன் இணைந்திருப்பது அதைச் செய்பவர்களுக்குச் சுவனத்தையும், நரகத்திலிருந்து பாதுகாப்பையும் அளிக்கும் ஸாலிஹான அமல்களில் உள்ள ஒன்றாகிவிடுகிறது.

இஸ்லாமிய சமூக அமைப்புக்குள் ஒவ்வொருவரும் வரிசையாகக் கொண்டு வரப்பட்டுள்ளார்கள். சமூகத்திற்கான உதவியை முதலில் குடும்ப வட்டத்தினுள் இருப்பவர்களுக்கும், பிறகு உறவு வட்டத்தினுள் இருப்பவர்களுக்கும் பிறகு சமூகத்தில் உள்ளவர்களுக்கும் செய்ய வேண்டுமென விரிவாக்கப்படுகிறது. மனித வாழ்வை இன்பமானதாகவும் அழகானதாகவும் இவ்வரிசை முறை அமைத்துத் தருகிறது.

உறவினர்களில் ஏழையாக இருப்பவர்களுக்குப் பொருளைச் செலவு செய்வது அன்பையும் நேசத்தையும் அதிகரித்து உறவைப் பலப்படுத்தும். பொருளை உறவினர்களுக்காகச் செலவு செய்வது மட்டும் அவர்களுடன் சேர்ந்து வாழ்வதாகாது. சேர்ந்து வாழ்வதற்குப் பல வழிகள் உண்டு. சான்றாக அவர்களைச் சந்திக்கச் செல்வது அவர்களுக்கு உபதேசம் செய்வது, உதவி, ஒத்தாசை புரிவது, விட்டுக் கொடுப்பது, அழகிய வார்த்தை பேசுவது மகிழ்வான முகத்துடன் பார்ப்பது போன்றவையாகும்.

**அண்டை வீட்டார்**

இஸ்லாத்தின் இலட்சியமான உலக அமைதியைக் காண குடும்பத்திலிருந்து அமைதியைச் சமுதாயத்திற்குப் பரப்ப வேண்டும். பல குடும்பங்கள் கொண்ட ஒரு சமூகத்தில் ஒரு குடும்பத்திற்கும் சார்ந்திருக்கும் அடுத்த குடும்பத்திற்குமிடையே உறவைப் பலப்படுத்த வேண்டும். அண்டை வீட்டினரிடையே உள்ள கடமைகள் தான் குடும்பங்களை இணைக்கும் பாலமாக, சங்கிலியாக உள்ளது. அண்டை வீட்டார் மூன்று வகைப்படுவர்.

முதலாவது உறவுக்காராக உள்ள முஸ்லிம்; இரண்டாவதாக உறவு இல்லாத முஸ்லிம்; மூன்றாவதாக முஸ்லிம் அல்லாதார். இஸ்லாமியச் சட்டப்படி மூன்று வகையினருக்குமே மூன்று விதக் கடமைகளுள்ளன. அண்டை வீட்டார் முஸ்லிமாக இருந்தாலும், முஸ்லிமல்லாதவராக இருந்தாலும், சொந்தக்காரராக இருந்தாலும், பந்தமில்லாதவராக இருந்தாலும் அவர்களுடன் நேசம் கொண்டு

ஒத்து வாழ வேண்டும் என்று தான் இஸ்லாம் இயம்புகிறது. இப்படி நேச உறவு இருந்தால் ஒரு ஊரில் வகுப்புக்கலவரமோ, ஒரு நாட்டில் இனக்கலவரமோ அண்டை நாடுகளுக்கிடையே போரோ நடக்காது.

சமுதாயத்தில் ஒருவருக்கொருவர் உதவியுடனும் ஒற்றுமையுடனும் வாழ வேண்டும் என்பதுடன் உறவைப் பேணி வாழ வேண்டும் என்றும் இஸ்லாம் அறிவுறுத்துகிறது. அண்டை வீட்டாருடன் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்றும் எடுத்தியம்புகிறது[14] என்றுரைக்கிறார் உ. அலிபாவா.

அஷ்ஷைக் முஹம்மது அலீ அல் ஹாஷிமி, “முஸ்லிம் அண்டை வீட்டாருடன் சிறப்பான உறவைக் கொண்டிருக்க வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகிறது. இஸ்லாமுக்கு முந்திய எந்தவொரு மதமும் இஸ்லாமிய வருகைக்குப்பின் உருவான எந்தவொரு அமைப்பும், சித்தாந்தமும் அறிந்திராத உன்னதமான வழியில் மனித உறவுகளைச் சீரமைப்பதில் இஸ்லாம் மட்டுமே தனித்து நிற்கிறது”[15] என்கிறார். அண்டை வீட்டாருடன் நடந்து கொள்ளும் முறையைப் பற்றி,

> அண்டை வீட்டிலுள்ள உறவினர்களுக்கும், அருகிலுள்ள அண்டை வீட்டாருக்கும், உபகாரம் செய்யுங்கள் (04:36)

என்று திருமறையும்,

> அண்டை வீட்டார் பசித்திருக்க தான் மட்டும் வயிறு நிறைய சாப்பிடுபவர் உண்மையான முஸ்லிம் (இறை நம்பிக்கையாளர்) ஆக மாட்டார்[16] (பைஹகி)

> அண்டை வீட்டார் உதவி கேட்டால் உதவுங்கள்; கடன் கேட்டால் கொடுங்கள்; துயர வேளைகளில் நிவாரணம் அளியுங்கள்: நோயுற்றால் நலம் விசாரியுங்கள்: மரணமுற்றால் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்ளுங்கள்: நல்லவை நடந்தால் வாழ்த்துக் கூறுங்கள் தீயவை நடந்தால் அனுதாபம் தெரிவியுங்கள்: அண்டை வீட்டினருக்குக் காற்றுக் கிட்டாதவாறு உங்கள் சுவரை அவர்கள்

அனுமதியின்றி உயரமாக எழுப்பாதீர்கள்: தொல்லை தராதீர்கள் (நூல்:காமில்)

எவர் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொண்டாரோ அவர் அண்டை வீட்டாருடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளட்டும். எவர் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொண்டாரோ அவர் விருந்தினரை கண்ணியப்படுத்தட்டும், எவர் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொண்டாரோ அவர் பேசினால் நல்லது பேசட்டும் அல்லது மௌனம் காக்கட்டும்[18]

என்று நபி மொழிகளும் மொழிகின்றன.

நேர்மையான இஸ்லாமியர் தனது அறிவுத்திறனால் நேர்வழியைப் பெற்றவராகவும், மென்மையான உள்ளமும், சிறந்த சிந்தனையும் காணப்படும். தன் வீட்டிற்கு அருகில் உள்ள வீட்டாரின் உணர்வுகளைப் புரிந்து அவரது மகிழ்ச்சியில் தானும் மகிழ்ந்து அவரது துன்பம் கண்டு தான் வேதனையும் அடைவர். மேலும் ஒரு நபிமொழியில்,

ஒரு முஸ்லிம் நற்பேற்றுக்கு அடையாளங்கள் மூன்றாகும் அவை:

1. விசாலமான இல்லம்
2. நல்ல அண்டை வீட்டார்
3. ஏற்றமிகு வாகனம் (அல்அதபுல் மு.ஃப்ரத்)

என மொழிகிறது.

**விசாலமான இல்லம்**

மனிதன் வாழும் இல்லமானது விசாலமானதாக இருப்பின் அவை சிறந்த இல்லம் என்கிறது நபிமொழி. எங்ஙனமென்றால், காற்றோட்டமுள்ள வீடு மேலும் விருந்தினர்கள் வந்தால் அவர்கள் தங்குவதற்கான அனைத்து வசதிகளைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.

**நல்ல அண்டைவீட்டார்**

நம் வீட்டிற்கு அருகில் உள்ள வீட்டினர் நல்லவர்களாக இருக்க வேண்டும் என்றால் முதலில் நாம் அவர்களிடம் நன்றாகப் பழக வேண்டும். நாம் எப்படி பிறரிடம் நடந்து கொள்கின்றோமோ அதைப் போலவே அவர்களும் நம்மிடம் நடந்து கொள்வார்கள் என்ற எண்ணத்துடன் பழகுதல் அவசியமானதாகும். அண்டை வீட்டாருடன் வெறுப்புகள் இன்றி மகிழ்ச்சியாகப் பழகுதல் வேண்டும். அதுபோல அவர்களும் இருத்தல் வேண்டும்.

அண்டை என்றுரைக்கும்போது ஒருவருடைய வீட்டை ஒட்டியுள்ள வீட்டாரையும், ஒரு கிராமத்திற்கு அடுத்துள்ள கிராமத்தையும், ஒரு மாவட்டத்தை அடுத்துள்ள மாவட்டத்தையும், ஒரு மாநிலத்தை அடுத்துள்ள மாநிலத்தையும், ஒரு நாட்டை அடுத்துள்ள நாட்டையும் குறிக்கும். எனவே அண்டை வீட்டில் துவங்கும் நல்லுரவு அடுத்தடுத்த நாடுகளுக்குமிடையே சமூக நிலையை உருவாக்கி உலகில் சாந்தி, சமாதானத்தை நிலவ வழி வகுக்கும்.

**ஏற்ற மிகுவாகனம்**

வாகனம் என்பது நாம் பயணத்தை எளிதில் சென்றடைவதற்கான ஒரு கருவியாகும். இவை விலங்குகளாகவும் இருக்கலாம் அல்லது எந்திரங்களாகவும் இருக்கலாம். பயணங்களுக்கு உகந்ததாக இருத்தல் வேண்டும். இவை இஸ்லாமியர்களின் நற்பேற்றுக்கான அடையாளமாகும் என்று நபிமொழி குறிப்பிடுகிறது.

**சகோதர சகோதரிகள் மற்றும் நண்பர்கள்**

இஸ்லாமியர் தனது சகோதர சகோதரிகளிடம் மற்றும் நண்பர்களிடம் சுயநலமற்று நேசித்தல் வேண்டும். எந்தவொரு எதிர்பார்ப்புகளுமின்றி நல்ல பண்புகளுடன் அன்பு கொள்வது நேர்மையான இஸ்லாமியனின் பண்பாகும். இஸ்லாம் உண்மையான சகோதரத்துவ அமைப்பாகும். இது அல்லாஹ், அவனது தூதரால் மனித உறவில் ஏற்படுத்தப்பட்ட ஒரு சங்கிலிப் பிணைப்புப் போன்றதாகும். மனித வரலாற்றில் சகோதரத்துவத்தைப் பேணுவதில் இஸ்லாம் மட்டுமே தனித்து நிற்கிறது. சகோதரத்துவததை,

> நாம் உம்முடைய கையை உம் சகோதரனைக் கொண்டு வலுப்படுத்துவோம் (28:35)

இறை நம்பிக்கையாளர்கள் (யாவரும்) சகோதரர்களே!
(49:10)

அவனுடைய அருளால் நீங்கள் சகோதரர்களாய் ஆகிவிட்டீர்கள் (50:13,3:103)

அவர்கள் உங்கள் சகோதரர்களே யாவார்கள்
(02:220)

அவர்கள் உங்களுக்கு மார்க்கச் சகோதரர்களே!
(09:11)

உங்கள் சகோதரிகள் வீடுகளிலோ உங்கள் தந்தையின் சகோதரிகள் வீடுகளிலோ
(24:6,24:31,33:55)

என வரும் திருமறை வசனங்களில் சகோதரர்கள் பற்றி அறிய முடிகிறது.

அல்லாஹ் திருப்பொருத்தத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு நேசித்துக் கொள்பவர்களுக்கு அல்லாஹ் சுவனத்தில் தயார் செய்து வைத்திருக்கும் அருட்கொடைகள் மற்றும் மறுமை நாளில் அவர்களுக்கு அல்லாஹ் வழங்கவிருக்கும் உன்னத நிலை பற்றியும் விரிவாகக் கூறும் நபிமொழிகள் நிரம்ப உள்ளன.

அல்லாஹ்வின் நிழல் மட்டுமே உள்ள மறுமை நாளில் அந்த நிழலுக்காகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களில் அல்லாஹ்வுக்காக நேசிப்பவர்களுக்கும் இடமுண்டு என்பதிலிருந்து அவர்களுக்கு எவ்வளவு பெரிய கௌரவம் உண்டு என்று தெரிந்து கொள்ளலாம்.

அல்லாஹ்வுக்காகவே நேசிப்பவர்களைச் சிறப்பித்துக் கூறும் முகமாக மஹ்ஷர் மைதானத்தில் அல்லாஹ் கூறுவான், என்னுடைய மகத்துவத்துக்காக தங்களிடையே நேசித்துக் கொண்டவர்கள் எங்கே? என்னுடைய நிழலைத் தவிர வேறெந்த நிழலும் இல்லாத இன்றைய நாளில் என்னுடைய நிழலில் அவர்களுக்கு இடமளிக்கிறேன் (ஸஹீஹ் முஸ்லீம்)

என்று நபிமொழியும் மொழிகிறது.

இஸ்லாமியர்களிடையே சகோதர சகோதரிகளிடையே கண்ணியத்துடனும், மரியாதையுடனும், பழகுதல் வேண்டும், நம் தாய் தந்தையரிடம் காட்டும் அன்பு அவர்களிடத்தும் காட்டல் வேண்டும். அவர்கள் கூறும் நல்வார்த்தைகளைக் கேட்டு நேர்வழியில் செல்லுதல் வேண்டும் என்று இஸ்லாம் கூறுகிறது.

**நண்பர்கள்**

நட்பு என்பது ஒவ்வொரு மனிதனின் தனிப்பட்ட வாழ்க்கையிலும், கூட்டு வாழ்க்கையிலும் மிகப்பெரிய மாற்றங்களைக் கொண்டு வரும் வலிமையைக் கொண்டது. மனிதர்கள் தாங்கள் வாழ்க்கையில் ஏற்படுத்திக்கொள்ளும் நட்பிற்கும் தோழமைக்கும் இஸ்லாம் மிகவும் முக்கியத்துவம் தருகின்றது. "தோழர் மீது அன்பு செலுத்துங்கள்! தோழர்கள் அனைவரும் அன்பு செலுத்தக் கூடிய மையமாக நீங்கள் திகழுங்கள். தோழர்கள் ஒருவரை மிகவும் பிரியமாக வைத்திருந்தாலோ, மேலும் தோழர்களுடன் ஒருவர் பிரியமாக இருந்தாலோ அத்தகையோர் பெரும் பாக்கியமுடையவர் ஆவார். ஒருவர் மக்களை வெறுக்கிறார்; மேலும், மக்கள் அவரை விட்டு ஓடுகின்றார்கள் எனில், அவர் மிகவும் துர்ப்பாக்கியம் உடையவர் ஆவார். செல்வம் இல்லாதவர் வறுமையில் வாடுபவர் அல்லர்! மாறாக, எவர்க்கும் யாரும் நண்பராக இல்லையோ அவரே உண்மையில் வறுமையில் உழல்பவர் ஆவார்! தோழர்கள் வாழ்வின் அலங்காரமாகும். வாழ்க்கைப் பயணத்தில் துணைவர்களாகவும், இறைவன் வழங்கிய கொடைகளாகவும் இருக்கின்றனர். எனவே, தோழர்களை உருவாக்குங்கள், மற்றவர்களுக்குத் தோழராகத் திகழுங்கள்"[21] என்கிறார் முஹம்மத் யூசுப் இஸ்லாஹி. திருமறையில்,

> இறை நம்பிக்கைக் கொண்ட ஆண்கள், பெண்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் ஆதரவாளர்களாய் இருக்கின்றார்கள் (09:71)

> கண்ணியம் பெறுவதற்காக இறை நம்பிக்கையாளர்களை விட்டும் மற்றவர்களை உற்ற நண்பர்களாக்கிக் கொள்ளாதீர்கள் (04:89)

> அல்லாஹ் இப்ராஹீமை நண்பராக எடுத்துக் கொண்டான் (04:125)

> நண்பன் வீட்டில் உண்பது குற்றமில்லை (24:61)

> மறுமையில் அல்லாஹ்வைத் தவிர உதவி புரியும் நண்பரில்லை (42:46)

எனும் நட்பின் நிலையினைப்பற்றித் திருமறையும்,

> ஒரு மு.ஃ.மின், மற்றொரு மு.ஃ.மினுக்குக் கட்டிடத்தைப் போன்றவராவார். அதில் ஒரு பாகம் மற்றொரு பாகத்திற்கு வலுச் சேர்க்கிறது (ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ்முஸ்லிம்)

> முஸ்லிம்கள் ஒரே உடலைப் போன்றவர்கள், கண் ‘வலி’யை முறையிட்டால் அனைத்து உறுப்புகளும் முறையிடுகின்றன. தலை ‘வலி’யை முறையிட்டால் அனைத்து உறுப்புகளும் முறையிடுகின்றன (ஸஹீஹ் முஸ்லிம்)

என்னும் நபிமொழியும் உரைக்கிறது.

நபி (ஸல்) அவர்களின் இந்த உன்னத வழிகாட்டலை அறிந்த முஸ்லிம் தனது இதயத்தை மென்மையாக்கி சகோதரர்களையும் நண்பர்களையும் நேசிப்பதைத் தவிர வேறு வழியைக் காணமாட்டார். இதனால் அவர் இவ்வுலகில் நன்மைகளை விதைக்கிறார். அதன் பலனாக மறுமையில் அல்லாஹ்வின் நேசத்தையும், திருப் பொருத்தத்தையும், வெற்றியையும் அறுவடை செய்து கொள்கிறார்[22] என்றுரைக்கிறது முன்மாதிரி முஸ்லிம் என்னும் நூல். மற்றுமொரு நபிமொழி,

> இறை நம்பிக்கையாளர் அன்பு – பாசத்தின் உருவம் ஆவார். ஒருவர், மற்றவர் மீது அன்பு செலுத்துங்கள், பிறர் ஒருவர் மீது அன்பு செலுத்துவதில்லை எனில், அவரிடம் எந்த நன்மையும் சிறப்பும் அறவே இல்லை (ஆதாரம்: மிஷ்காத் பாப் அல்.ஷ.ஃ.ப்கத்)

என்கிறது. சமூக நல்லிணக்கத்தைப் பேணிக் காப்பதில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தும் உறுதியான நேசத்தை நபி (ஸல்) அவர்கள் வலியுறுத்தினார்கள். அந்த நேசத்தை வெளிப்படையாக அறிவித்துவிடுமாறும் ஏவினார்கள். அப்போது இதயக் கதவுகள் திறந்து அன்பும் நேசமும் மனிதர்களிடையே ஊடுருவிச் செல்லும்.

ஒருவருடைய இனம், மொழி, நிறம் போன்ற பேதமைக்கு அப்பாற்பட்டு, "லாகிலாஹ இல்லல்லாஹ்" என்ற திருக்கலிமாவின் கீழ் இஸ்லாம் மனிதர்களைச் சகோதரத்துவத்தால் பிணைக்கிறது.

**சமூகம்**

இஸ்லாமிய மார்க்கச் சட்டங்களைப் பின்பற்றும் இஸ்லாமியர் இயல்பிலேயே சமூகச் சிந்தனை கொண்டவர்களாகத்தான் இருப்பர். உலக வாழ்க்கையில் இஸ்லாமிய மக்கள், அனைவரிடமும் சமூக அக்கறை கொண்ட வாழ்வினை மேற்கொள்வர். இஸ்லாமியர் உயரிய பண்புகளையுடைய சமூகச் சேவகராக இருப்பார். அவர் உயரிய மனித குணங்களைக் கொண்டிருக்க வேண்டுமெனவும் சமூகத்தோடு உறவாடும்போது அந்தக் குணங்களை வெளிப்படுத்த வேண்டுமெனவும் இஸ்லாம் வலியுறுத்துகிறது.

"சமயம், பண்பாடு, அறிவியல், அரசியல், நாட்டுப்பற்று முதலியவற்றின் அடிப்படையில் சேர்ந்து செயல்படும் வாழும் மக்கள் கூட்டத்தினையே சமுதாயம் என அறிஞர் பொதுவாகக் கூறுவர். நெடுங்காலம் ஒன்றாய்க் கூடி வாழ்ந்தும், தொழில் புரிந்தும் வரும் மக்கள் கூட்டத்தைக் சமுதாயம்[24] என்று கூறுவர் மானுடவியலறிஞர்கள். சமுதாயம் என்றச் சொல்லானது மக்களைக் குறித்தாலும் அம்மக்களின் ஒரே விதமான பழக்கங்களையும், பண்பாடுகளையும் கொண்டதொரு மக்கள் தொகுதியினைக் குறிக்கிறது.

"பல்வேறு மனிதர்கள் கூட்டாக இணைந்து வாழ்கின்ற கூட்டம் சமுதாயம் ஆகும். ஒரு சிறிய நிலப்பரப்பில் ஒரு பொது வாழ்க்கை வழியைப் பின்பற்றிக் கூட்டமாக வாழும் மக்கள் தொகுதி சமுதாயம் (community) எனப்படும் இது மக்கள் ஒன்று கூடி ஒன்றுபட்ட எண்ணத்துடன் ஓர் இடத்தில் வாழும் அமைப்பைக் குறிக்கும்"[25] என்று நா. பாலுச்சாமி கூறுகிறார்

சமூகம் என்பது பல்வேறு நிலைகளில் எல்லையாக விளங்குகின்றது. தனியொரு மனிதன் சமூகத்தின் ஓர் அங்கத்தினன். தனி மனிதர் பலரின் இணைவு சமூகம் எனப்படுகிறது. மக்கள் ஒன்று கூடி வாழக்கூடிய, தெரு, கிராமம், நகரம், மாவட்டம், மாநிலம் நாடு, உலகம் என்று பல வகைகளில் அதன் அளவிற்குச் சுருக்கமாகவும் விரித்தும் கூறலாம், ஒரு பெரும் சமூகம் என்பது நெருங்கிய உறவுகள். பல்வேறு தன்மைகளைக் கொண்ட சிறிய

சமூகங்கள் பலவற்றையும் குழுக்களையும் உள்ளடக்கியதாகும். இது போன்ற சமூகத்தில் வாழக்கூடிய மக்களின் இயல்புகள், பண்புகள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றுனுள் பெரும்பாலும் உலகம் முழுமையும் வாழ்கின்ற எல்லா மனிதர்களுக்கும் பொருந்துமாறு அமைந்திருக்கும்.

சமூக உணர்வுகளுடைய இஸ்லாமியர்களின் பண்புகள் திருக்குர்ஆனின் ஒளிமயமான வழிகாட்டுதலையும், பரிசுத்தமான நபித்துவ நடைமுறைகளையும் கொண்ட தனித்தன்மை வாய்ந்த பண்புகளாகும். சமூகம் பற்றி செய்திகளைத் திருமறையில் இறைவன்,

> மனிதர்கள் ஒரே சமுதாயத்தினராகவே இருந்தார்கள் (02:213)

> தீயதில் இருந்து (மக்களை) விலக்குபவர்களாகவும் உங்களில் இருந்து ஒரு கூட்டத்தார் இருக்கட்டும் (03:104)

> அவர்களில் சிலர் நேர்வழி உள்ள சமுதாயத்தினராய் இருக்கிறார்கள் (05:66)

> அச்சமூட்டி எச்சரிக்கை செய்த பலர் வராத எந்த சமுதாயத்தவரும் (பூமியில்) இல்லை (35:24)

என்று குறிப்பிடுகிறான். நபிமொழி,

> மனிதர்கள் தங்களுக்குள் பொறாமை கொள்ளாத காலமெல்லாம் நன்மையின் மீதே நிலைத் திருப்பார்கள[26] (மு.ஃ.ஜமுத்தப்ரானி)

> அசிங்கமான சொல், செயல்கள் இஸ்லாமில் உள்ளவை அல்ல. மனிதர்களில் அழகானவர் யாரெனில் அவர்களில் நற்குணத்தால் அழகானவரே[27] (முஸ்னத் அஹ்மத்)

என்றுரைக்கிறது.

மனிதர்களுக்கிடையே பொறாமை கொள்ளுதல் என்பது சமூகத்தில் பெரும் பிளவினை ஏற்படுத்திவிடும். இதனால் வீண் சண்டைகள் பிரச்சனைகள்

போன்றவைகள் உண்டாகும். இஸ்லாமியர்கள் அசிங்கமான வார்த்தைகள் பேசுவதைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். இதனால் சமூகத்தில் தேவையற்ற பிரச்சனை உண்டாகும். மனிதரில் அழகானவர் யாரென்றால் அவர் நற்குணத்தைப் பெற்றவரே என்று நபிமொழி உரைக்கிறது.

இஸ்லாம் வலியுறுத்தும் சமூக அமைப்பு மிகவும் உயர்வானதாகும். அவை நற்பண்புகள் கொண்ட ஒட்டு மொத்த இணைப்பாகும். இப்பண்புகளைக் கொண்டவர் நன்மைகளைப் பெறுவார். இவற்றை விடுபவர் அல்லாஹ்வின் சமூகத்தில் குற்றவாலியாவார். எனவே இஸ்லாத்தில் சமூக வாழ்வுக்கான நேர்வழியினை மனிதகுலம் பெற்றுக் கொள்ள முடியும்.

திருக்குர்ஆன் நபிமொழிச் சான்றுகளை ஆழ்ந்து நோக்குபவர் அவற்றின் கருத்துக்களையும் நுட்பத்தையும் கண்டு திகைத்துப் போவார்கள். ஏனெனில் அச்சான்றுகள் சமூக வாழ்வின் அனைத்துப் பகுதிகளையும் தொட்டு நிற்கின்றன. ஒரு இஸ்லாமியன் எவ்வாறு வாழ வேண்டுமென விரும்புகிறதோ அத்தகைய பரிசுத்தமான உயர்வின்பால் வழிகாட்டுகின்றது. எவருடைய மனதில் இஸ்லாத்தின் கொள்கைகள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டதோ அவர் இந்த உயரிய நிலையினை அடைந்தே தீருவார்.

இஸ்லாமிய சமூகக் கொள்கைகளின் அடிப்படை நோக்கம் என்னவென்றால், சமூக ரீதியான தொடர்புகளிலும், தனிமனித உறவுகளிலும் அல்லாஹ் ஏற்படுத்திய வரம்புகளிலும் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும். இறைவனுடைய அச்சத்தினைக் கொண்டு நேர்வழியில் நடக்கும் இஸ்லாமியர் தனது வாழ்வில் சமூகத்துடன் இணைந்து வாழும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை நன்கறிவார், இது போன்ற உறுதியான அடிப்படையின் மீதே தனது சமூக உறவை அமைத்துக் கொள்வார்.

நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்று நாடுவோர் எத்தனை திட்டங்களைத் தீட்டினாலும், நாயகம் (ஸல்) அவர்கள் கையாண்ட முறைகளை மேற்கொண்டால் தான் நற்பலனை அடைந்து வெற்றியைப் பெற முடியும். ஆகவே தனிமனிதனும் சமுதாயமும் இவ்வுயரிய வழிகளைப் பின்பற்றி மனித சமுதாயத்தைப் புனிதமாக்க முயல வேண்டும்.

முடிவுகள்

❋ குடும்பம் என்பது தாய், தந்தை, கணவன், மனைவி, சகோதர சகோதரிகள் குழந்தைகள் என்னும் உறுப்பினர்களைக் கொண்டு இயங்கும் அமைப்பாகும்.

❋ குடும்ப உறுப்பினர்கள் குடும்பத்தோடும் சமூகத்தாரோடும் பழகும் முறைமைகளைத் திருக்குர்ஆன் எடுத்துரைக்கிறது. தாய், தந்தையரிடம் கண்ணியமாக நடந்து கொள்ளவும் அவர்கள் முதுமை அடையும் காலங்களில் அவர்களைக் கடிந்து பேசாமலும், 'சீ' என்று கூறாமலும் அவர்களிடத்துப் பாசத்துடனும் கருணையுடனும் நடந்து கொள்ள வேண்டுமெனத் திருமறை மொழிகிறது. மேலும் சொர்க்கம் தாயின் காலடியில் உள்ளது எனவும் திருமறை இயம்புகிறது.

❋ இறைவன் தம் திருமறையில் கணவன் மனைவி உறவை 'ஆண் பெண்ணுக்கு ஆடையாகவும், பெண் ஆணுக்கு ஆடையாகவும்' விளங்க வேண்டுமென்று வலியுறுத்துகிறான்.

❋ தாய் தந்தையர்கள் 'குழந்தைகளிடம் கண்ணியத்துடன் நடந்துகொள்வது கடமை என்றும் அவர்களுக்கு அளிக்கும் மாபெரும் பரிசு நல்லொழுக்கமே' எனத் திருமறை மொழிகிறது.

❋ குழந்தைகளிடம் சமத்துவத்தைப் பேண கற்றுத்தர பெற்றோருக்கு இஸ்லாம் வலியுறுத்துகிறது.

❋ இரத்த பந்தங்களான உறவினர்களை நேசிப்பது இஸ்லாமியர்களின் அடிப்படைக் கடமையாகும். அவர்கள் துன்பப்படும் காலங்களில் உதவி செய்ய திருமறை வழி இறைவன் ஏவுகிறான். மேலும் அண்டை வீட்டார் பசித்திருக்க தான் மட்டும் வயிறு நிறைய உண்பவன் உண்மையான இஸ்லாமியன் அல்லன் எனக் கடிந்துரைக்கிறான்.

❋ அண்டை வீட்டாருடன் நல்லுறவைப் பேணுவதை இஸ்லாம் வலியுறுத்துகிறது.

- ❋ இஸ்லாமியர் தனது சகோதர சகோதரிகளிடம் சுயநலமற்ற நேசிப்பு எதிர்பார்ப்பு இல்லா உறவு, நேர்மையான அன்பு போன்ற பண்புகளைக் கொண்டு பேண வேண்டுமென்கிறது.
- ❋ நட்பு கண்ணியமான உறவு என்றும் ஒவ்வொரு மனிதனின் தனிப்பட்ட வாழ்க்கையிலும் கூட்டு வாழ்க்கையிலும் மிகப்பெரிய மாற்றங்களைக் கொண்டு வரும் வலிமை இதற்கு உண்டு என்பதைத் திருக்குர்ஆன் எடுத்துரைக்கிறது.
- ❋ இஸ்லாமிய மார்க்க சட்டங்களைப் பின்பற்றும் இஸ்லாமியர், சமூக நல்லிணக்கத்தைப் பேணிக்காப்பதில் சிந்தனை கொண்டவராக இருப்பர்.
- ❋ இஸ்லாமிய சமூகக் கொள்கைகளின் அடிப்படை நோக்கம் என்பது சமூக ரீதியான தொடர்புகளிலும், தனிமனித உறவுகளிலும் ‘அல்லாஹ்’ ஏற்படுத்திய வரம்புகளுக்குக் கட்டுபட்டு நடப்பதாகும்.

**அடிக்குறிப்புகள்**

1. உ. அலிபாவா, தமிழில் இஸ்லாமியச் சதக இலக்கியங்கள், ப.204.
2. அஷ்ஷைக் முஹம்மது அலீ அல் ஹாஷிமி, முன்மாதிரி முஸ்லிம், ப.50.
3. கே.வி.எஸ். ஹபீப் முஹம்மத் (தொ.ஆ.), வேத வரிகளும் தூதர் மொழிகளும், ப.146.
4. நபிகளாரின் பொன் மொழிகள், ஸஹீஹுல் புகாரி (ஆறாம் பாகம்), ப.531.
5. கே.வி.எஸ். ஹபீப் முஹம்மத் (தொ.ஆ.), மு.நூ., ப.146.
6. முஹம்மத் யூசுப் இஸ்லாஹி, நாமும் சமூகமும் (வாழ்க்கைக் கலை பாகம்-3), ப.1.
7. அஷ்ஷைக் முஹம்மது அலீ அல் ஹாஷிமி, மு.நூ., ப.64.
8. உ.அலிபாவா, மு.நூ., ப.207.
9. கே.வி.எஸ். ஹபீப் முஹம்மத் (தொ.ஆ.), மு.நூ., ப.151.
10. மேலது., ப.152.
11. மேலது., ப.152
12. முஹம்மத் யூசுப் இஸ்லாஹி, மு.நூ., ப.32.
13. பரக்கத் - இறையருளால் அதிகப்படுத்துதல்.
14. உ.அலிபாவா, மு.நூ., ப.208.
15. அஷ்ஷைக் முஹம்மது அலீ அல் ஹாஷிமி, மு.நூ., ப.113.
16. குர்ரம் முராத், பெருமானார் தரும் பரிசு, ப.73.
17. கே.வி.எஸ். ஹபீப் முஹம்மத் (தொ.ஆ.), மு.நூ., ப.154.
18. அஷ்ஷைக் முஹம்மது அலீ அல் ஹாஷிமி, மு.நூ., ப.114.
19. அப்துல் க.ஃபார் ரஹ்மானி (தொ.ஆ.), மாநபி மணி மொழிகள், ப.247.
20. அஷ்ஷைக் முஹம்மது அலீ அல் ஹஷிமி, மு.நூ., ப.129.
21. முஹம்மத் யூசுப் இஸ்லாஹி, மு.நூ., ப.51.
22. அஷ்ஷைக் முஹம்மது அலீ அல் ஹாஷிமி, மு.நூ., ப.133.
23. முஹம்மத் யூசுப் இஸ்லாஹி, மு.நூ., ப.51.
24. சே. இராசேந்திரன், தமிழக் கவிதையில் திராவிட இயக்கத்தின் தாக்கம், ப.8.
25. நா. பாலுச்சாமி (மு.ப.ஆ.), வாழ்வியற் களஞ்சியம் (தொகுதி எட்டு), ப.469.
26. அஷ்ஷைக் முஹம்மது அலீ அல் ஹாஷிமி, மு.நூ., ப.157.
27. மேலது., ப.163.